**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
*******

2023–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 – ம் நாள் வியாழக்கிழமை
******

**இடைமனு எண்.3/2023–ல் அசல் வழக்கு எண். 148/2016**

M. கலியமூர்த்தி .....மனுதாரர்/வாதி...

...எதிர்...

1. புஷ்பவள்ளி
2. காமராஜ்
3. சரவணன் ..1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்...
4. காவியா
5. விக்னேஷ்
6. சூரியா ... 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/இறந்த 2–ம் பிரதிவாதியின் வாரிசுகள்/புதிய தரப்பினர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 11.08.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு E. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

2–ம் பிரதிவாதியின் வாரிசுகளை மனுதாரர்/வாதி உரிய காலத்தில் இவ்வழக்கில் சேர்க்காததால் 2–ம் பிரதிவாதி பொறுத்து கடந்த 03.06.2020 நாளன்று Abatement ஆனதை மாற்றுவதற்கு ஏற்பட்ட 1042 நாட்கள் காலதமதத்தை மன்னித்து உத்தரவிட்க்கோரி மனுதாரரால் இம்மனு காலவரையரைச்கட்டம் பிரிவு–5–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இவ்ழக்கின் 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி காமராஜ் கடந்த 03.03.2020-ல் இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்கள். மேற்படி அசல் வழக்கில் மனுதாரரின் மனைவி புஷ்பவள்ளி 1-ம் பிரதிவாதியாக ஏற்கனவே இவ்வழக்கில் உள்ளார். மேலும் இறந்த 2-ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு Abatement ஆகிவிட்டது. Abatement மனுவை இந்நீதிமன்றத்தில் 150 நாட்களுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மேற்படி 2-ம் பிரதிவாதியின் வாரிசுகள் சீர்காழியை விட்டு சென்றுவிட்டதாலும், மேலும் அப்போது கொரோனா தொற்று பரவிய காலம் என்பதாலும் மனுதாரரால் வழக்கறிஞரை சந்தித்து 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி Abatement ஆன நிலையை மாற்றுவதற்கு 1042 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இந்த கால தாமதத்தை மன்னிக்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படகூடும். எனவே 1–ம் பிரதிவாதியின் வாதிசுகளை மனுதாரர்/வாதி உரிய காலத்தில் இவ்வழக்கில் புதிய தரப்பினர்களாக சேர்க்காததால் 2–ம் பிரதிவாதி பொறுத்து கடந்த 03.06.2020 –ம் தேதியன் Abatement ஆனதை மாற்றுவதற்கு ஏற்பட்ட 1042 நாட்கள் காலதமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

இந்த எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் சரியல்ல. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இவ்ழக்கின்

2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி காமராஜ் கடந்த 03.03.2020-ல் இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகள் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்கள் என்றும், அவருடைய மனைவி 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி என்றும், வேறு வாரிசுகன் இல்ல என்பதையும் மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். 2-ம் எதிர்மனுதாரர் இறந்த 90 நாட்களுக்குள்ளும் அதன் பிறகு 60 நாட்களுக்குள்ளும் ஏன் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை. அதன் பிறகு ஏற்பட்ட 1044 நாட்கள் சுமார் 3 வருடங்களுக்கு மேலாக காலதாமதம் ஆகி விட்டது என்பதற்கு எவ்வித காரணமும் மனுவில் கூறப்படவில்லை அதற்காக எவ்வித ஆவணங்களும் மனுபுடன் தாக்கல் செய்யப்படவில்லை. முதல் எதிர்மனுதார் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்/வாதியின் உறவினர்கள். அப்படி இருக்கையில் மனுதாரர் இறந்த 2-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை குறிப்பிட்ட காலத்தில் வழக்கில் தாக்கல் செய்யாமல் 2-ம் எதிர்மனுதாரர் இறந்த உடன் அவரது வாரிசுகள் சீர்காழியை விட்டு சென்றுவிட்டார்கள் என்றும், 2-ம் எதிர்மனுதாரர் கொரோனாவால் இறந்து விட்டதால் 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் 1044 நாட்கள் காலதாமதம் ஆகி விட்டது என்று கூறுவது சரியல்ல. மனுதாரர் ஒவ்வொரு நாள் காலதாமதத்தையும் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். காலதமத்திற்கான காரணங்கள் மனுவில் கூறப்படாததாலும் மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி நம்பரில் மனுதாரர்/வாதிக்கு சரியான சட்சி இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு வேண்டுமென்றே காலதாமதம் மனு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலதாமத மனுவையும் அத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபேட்மெண்ட் மனுவையும் வாரிசு மனுவையும் எதிர்மனுதார்கள் செலவித்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு</u>**

3. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. தீர்வு:</u>**

மனுதாரர் தரப்பில், மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், அசல் வழக்கில் வாதி என்றும், அசல் வழக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இவ்வழக்கின் 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி காமராஜ் கடந்த 03.03.2020-ல் இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகள் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்கள் என்றும், மேற்படி அசல் வழக்கில் மனுதாரரின் மனைவி புஷ்பவள்ளி 1-ம் பிரதிவாதியாக ஏற்கனவே இவ்வழக்கில் உள்ளார் என்றும், மேலும் இறந்த 2-ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு Abatement ஆகிவிட்டது என்றும், Abatement மனுவை இந்நீதிமன்றத்தில் 150 நாட்களுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், ஆனால் மேற்படி 2-ம் பிரதிவாதியின் வாரிசுகள் சீர்காழியை விட்டு சென்றுவிட்டதாலும், மேலும் அப்போது கொரோனா தொற்று பரவிய காலம் என்பதாலும் மனுதாரரால் வழக்கறிஞரை சந்தித்து 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், மேற்படி Abatement ஆன நிலையை மாற்றுவதற்கு 1042 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இந்த கால தாமதத்தை மன்னிக்க வேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படகூடும் என்றும், எனவே 1–ம் பிரதிவாதியின் வாதிசுகளை மனுதாரர்/வாதி உரிய காலத்தில் இவ்வழக்கில் புதிய

தரப்பினர்களாக சேர்க்காததால் 2–ம் பிரதிவாதி பொறுத்து கடந்த 03.06.2020 –ம் தேதியன் Abatement ஆனதை மாற்றுவதற்கு ஏற்பட்ட 1042 நாட்கள் காலதமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக் வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

6. பிரதிவாதிகள் தரப்பில், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது இவ்ழக்கின் 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதி காமராஜ் கடந்த 03.03.2020-ல் இறந்துவிட்டார் என்றும், அவருடைய வாரிசுகள் 4 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள்/புதிய தரப்பினர்கள் என்றும், அவருடைய மனைவி 1-ம் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி என்றும், வேறு வாரிசுகள் இல்ல என்பதையும் மனுதாரர்/வாதி நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், 2-ம் எதிர்மனுதாரர் இறந்த 90 நாட்களுக்குள்ளும் அதன் பிறகு 60 நாட்களுக்குள்ளும் ஏன் வாரிசு மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அதன் பிறகு ஏற்பட்ட 1044 நாட்கள் சுமார் 3 வருடங்களுக்கு மேலாக காலதாமதம் ஆகி விட்டது என்பதற்கு எவ்வித காரணமும் மனுவில் கூறப்படவில்லை அதற்காக எவ்வித ஆவணங்களும் மனுபுடன் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், முதல் எதிர்மனுதார் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர் மனுதாரர்/வாதியின் உறவினர்கள் என்றும், அப்படி இருக்கையில் இனுதாரர் இறந்த 2-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை குறிப்பிட்ட காலத்தில் வழக்கில் தாக்கல் செய்யாமல் 2-ம் எதிர்மனுதாரர் இறந்த உடன் அவரது வாரிசுகள் சீர்காழியை விட்டு சென்றுவிட்டார்கள் என்றும், 2-ம் எதிர்மனுதாரர் கொரோனாவால் இறந்து விட்டதால் 150 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் 1042 நாட்கள் காலதாமதம் ஆகி விட்டது என்று கூறுவது சரியல்ல என்றும், மனுதாரர் ஒவ்வொரு நாள் காலதாமதத்தையும் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், காலதமத்திற்கான காரணங்கள் மனுவில் கூறப்படதாலும் மனுதாரர் வேண்டுமென்றே மேற்படி நம்பரில் மனுதாரர்/வாதிக்கு சரியான சட்சி இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டு வேண்டுமென்றே காலதாமதம் மனு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி மனுதாரர்/வாதியால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள காலதாமத மனுவையும் அத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபேட்மெண்ட் மனுவையும் வாரிசு மனுவையும் எதிர்மனுதார்கள் செலவித்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது. 2-ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி கடந்த 03.06.2020 அன்று இறந்துவிட்ட நிலையில், அதனால் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட 1042 நாட்கள் காலதாமத்தை மன்னித்து உத்தரவிடகோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்கள் தரப்பில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சங்கதிகளை மறுத்துள்ளனர். இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும், தரப்பினர்கள் இடையே ஒரே பொருன்மையின் அடிப்படையில் பல்வேறு வழக்கு நடவடிக்கைகள் ஏற்படுவதை தடுக்கும் விதத்திலும் மனுதாருக்கு ஒரு வாய்ப்பளிக்கும் விதமாக அசல் வழக்கில் 2–ம் பிரதிவாதிக்கு எதிராக Abatement ஆனதை நீக்கரவு செய்ய ஏற்பட்ட 1042 நாட்கள் காலதாமதம் மன்னிக்க கோரியுள்ள இம்மனுவினை கீழ்கண்ட நிபந்தணையுடன் அனுமதிக்கலாம் என்று தீர்மாணித்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.2000/- ஐ 24.08.2023-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 25.08.2023.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.3/2023–ல்
அசல் வழக்கு எண்.148/2016
நாள்.17.08.2023.